
"சில்பாலோக்க வேலைத்திட்டம்"

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# சித்திரக்கலை

# தரம்- 12





## சுயகற்றலுக்கான கைபேடு



மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
அழகியல் பிரிவு

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேணடு மாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேணடு மாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாகக்ம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்படுள்ளது. இத்துடன் வழங்கப்படடுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாடடிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போனறோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ள துடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகினறேன்.

மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்படடுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன் பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மடடத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க, மாகாணக்

கல்விப்பணிப்பாளர், மத்திய மாகாணக்

ல்வித்திணைக்களம், கண்டி.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிடட்ல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்..

ஏ. ஆ ர். சத்தியேந்திரா,

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், மத்திய
மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**E.P.T.K** ஏக்கநாயக்க
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.R** சத்தியேந்திரா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.**சாருடீன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## நூலாக்க வழிகாட்டல்

திருமதி. **V.**அமுதவல்லி
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு)
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

## நூலாக்கக் குழுவுக்கான வளவாளர்கள்

திருமதி . வெ. சுபாஷினி
(ஆசிரியர்)
மமா/ஹட்/ சென்ன் தமிழ் மகா வித்தியாலயம் - ஹட்டன்

திருமதி . **P.** ஜெகதீஸ்வரி
(ஆசிரியர்)
க/சரஸ்வதி மத்திய கல்லூரி - புசல்லாவ.

திரு. சு. கமலநாதன்
(ஆசிரியர்)
க/சரஸ்வதி மத்திய கல்லூரி - புசல்லாவ.

திரு. பெ. கோணேஸ்வரன்
(ஆசிரியர்)
மமா/ஹட்/ டிக்கோயா நுண்கலைக் கல்லூரி - ஹட்டன்

# பொருளடக்கம்


| | அலகு | பக்கம் |
|---|---|---|
| 01 | செயற்பாடு 01-05 | 03-07 |
| 02 | செயற்பாடு 06-14 | 08-16 |
| 03 | முதலாம் தவணை பகுதி ii இற்கான செயற்பாடுகள் | 17 |
| 04 | முதலாம் தவணை பகுதி iii இற்கான செயற்பாடுகள் | 18 |
| 05 | செறற்பாடு 15-18 | 20-23 |
| 06 | செயற்பாடு 19-27 | 24-32 |
| 07 | இரண்டாம் தவணை பகுதி ii இற்கான செயற்பாடுகள் | 33 |
| 08 | இரண்டாம் தவணை பகுதி iii இற்கான செயற்பாடுகள் | 34 |
| 09 | செறய்பாடு 28-30 | 36-38 |
| 10 | செயற்பாடு 31-35 | 39-43 |
| 11 | செயற்பாடு 36- 41 | 44-49 |
| 12 | மூன்றாம் தவணை பகுதி ii இற்கான செயற்பாடுகள் | 50 |
| 13 | மூன்றாம் தவணை பகுதி iii இற்கான செயற்பாடுகள் | 51 |
| 14 | பகுதி ii இற்கான வழிகாட்டல் படங்கள் | 52-53 |
| 15 | பகுதி iii இற்கான வழிகாட்டல் படங்கள் | 54-55 |

## க.பொ.த உயர் தரம் சித்திரக்கலை வினாத்தாள் பற்றிய ஓர் அறிமுகம்

**இவ்வினாத்தாள் 03 வினாத்தாள்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு வினாத்தாளும் 100 புள்ளிகளைக் கொண்டது.**

**வினாத்தாள் 01**

பகுதி I – **40 புள்ளிகள்** - பல்தேர்வு வினாக்கள்
பகுதி II **-** **60 புள்ளிகள்** - இவற்றில்

- இலங்கை வரலாறு (எவையேனும் **இரு** வினாக்கள் தெரிவு செய்தல் வேண்டும்)
- இந்திய வரலாறு (எவையேனும் **ஒரு** வினாவைத் தெரிவு செய்தல் வேண்டும்)
- ஐரோப்பிய வரலாறு ( எவையேனும் **ஒரு** வினாவைத் தெரிவு செய்தல் வேண்டும்)

எனவே மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்

ஒரு வினா மூன்று பிரிவுகளைக் கொண்டது (3x5=15 புள்ளிகள்)
எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 15

இதன்படி 4x15= 60 புள்ளிகள்

02. **வினாத்தாள் 02**

- பொருட்கூட்டம் மொத்தம் - **100 புள்ளிகள்**

(வைக்கப்படும் பொருட் தொகுதியினை பார்த்து கீறுதல் வேண்டும்)

03. **வினாத்தாள் 03**

- கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்
- கிரப்பிக் சித்திரம்
- அலங்கார ஆக்கம்

(இவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து கீறுதல் வேண்டும்.)

மொத்தம் - **100 புள்ளிகள்**

**இவற்றின் அடிப்படையிலேயே இந்நூலில் மாணவர்களுக்கான செயற்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.**

# முதலாம் தவணை

# பகுதி I

தேர்ச்சி :- 6.1 தேர்ச்சி மட்டம் :- 6.1.1

செயற்பாடு இல :- 01

01. தற்கால கட்புலக் கலைகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் துறைகளின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்க.

1. ஓவியம்
2. சிற்பம்
3. நிழற்படக் கலை
4. கட்டிடக் கலை
5. திரைப்படம்

02. சித்திரக் கோட்பாடுகளுக்கமைய கட்புலக்கலையின் அடிப்படை அம்சங்களை எத்தனை? அவற்றை இனங்கண்டு விளக்குக.

03. மேற்பரப்புத் தன்மை **(texture)** என்பதால் நீர் அடையாளப்படுத்திக் தெளிவுக் காணும் விடயம் யாது?

04. மனிதனின் இயல்பு வாழ்க்கையில் "கட்புல கலையின் அடிப்படை அம்சங்கள்" எவ்வாறு துணைப் புரிகின்றன என்பதனை ஒப்பிட்டு ரீதியாக உதாரணங்களுடன் முன்வைக்குக.

05. நவீன சித்திரக் கோட்பாடுகளுக்கு இரேகைகள், வடிவம், வெளி, மேற்பரப்புத் தன்மை, வடிவம், வர்ணம் போன்ற அடிப்படை அம்சங்கள் துணைப்புரியுமாற்றினை விளக்குக.

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.1

செயற்பாடு இல :- 02

01. கலை நிர்மாணிப்பொன்றில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய கட்புலக் கொள்கைகளை அட்டவணைப்படுத்துக.

02. கலைப்படைப்பாக்கம் ஒன்றில் கீழ்வரும் கோட்பாடுகள் செழுத்தக் கூடிய செல்வாக்கினை மதிப்பீடு செய்க.

1. தூரதரிசனம் - (PERSPECTIVE)
2. முப்பரிமாண தன்மை - (**3 DIMENTIONAL FEATURE**)
3. பிரமாணம் - (PROPORATION)
4. ஒத்திசைவு - (HARMONY)
5. ஒருமைப்பாடு - (UNITY)
6. சமநிலை - (BALANCE)
7. லயம் - (RHYTHM)

03. முப்பரிமாணத் தன்மையை வழுவடையச் செய்யும் காரணிகள் யாவை?

04. தூரதரிசனத்தின் வகைப்பாடுகள் யாவை?

05. கோளவடிவில் கட்புலனாகும் விடயங்ளை ஒழுங்குப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் கோட்பாடு யாது?

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.1

செயற்பாடு இல :- 03

01. கட்புலக் கலையின் கலைப்பாணியின் வகைகள் யாவை?

02. சித்திரக் கலை வரலாற்றில் காணப்படும் கலைப் போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

03. யதார்த்த வாதத்திலிருந்து மீயதார்த்தவாத போக்கு வேறுப்படும் வித்தினை ஆராய்க.

04. பின்வரும் கலைப்பாணியின் அடிப்படைப் பண்புகளை ஆராய்க.

- ✓ கீழ்ேத்தேய வாதம்
- ✓ மீயதார்த்த வாதம்
- ✓ கனவடிவவாதம்
- ✓ அக்கடமிக் யதார்த்தவாதம்.
- ✓ மனோரீதியான வாதம்
- ✓ மனப்பதிவு வாதம்

05. தனி மனித உணர்வுகளுடன் இயற்கையழன் பிணைப்புக்கள் ஒன்றிணையும் போது மேலோங்கும் கலைப்போக்கு யாது?

06. கீழேத்தேய வாதம் ஏனைய அடிப்படைவாதக் கோட்பாட்டிலிருந்து தனித்து விளங்குவதற்குறிய காரணம் யாது?

07. மனோரீதியான வாதம் கீழேத்தேய வாதத்திலிருந்து எவ்வாறு தனித்துவம் பெறுகின்றது என்பதனை விளக்குக.

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.2

செயற்பாடு இல :- 04

01. இலங்கைக் கலை கலாசங்கத்தின் கலைஞர்களின் பெயர்களைப் பட்டியல் படுத்துக.

02. கலை கலாசங்கத்தின் வரலாற்றுப் பின்னியைச் சுருக்கமாக விளக்குக.

03. கலை கலாசங்கத்தின் இயக்கத்திற்கு அனுசரனை வழங்கிய நாடு யாது?

04. இலங்கைக் கலை கலாசங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?

05. கலாசங்க கலைஞர்களின் ஆக்கங்களை பட்டியலிடுக.

06. டேவிட் பெயின்டரின் கலையாக்கங்களில் கிரிஸ்தவ செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இக் கூற்றினை ஆராய்க.

07. A.C.G.S. அமரசேகரவின் ஆக்கங்களில் வறுமையின் ஆதிக்கம் அதிகம் காணப்படும் ஓவியம் பற்றி விளக்குக.

08. பின்வரும் ஓவியங்களை கலைப் பரிசீலனை செய்க.

தச்சனின் வீடு, வெற்றியுடன் ஜெருசலேத்திற்குத் திரும்புதல், நடனமாது.

09. கீழ் காணும் தொடர்புகளை சரியாக இனங் கண்டு இணைக்குக.

| | |
|---|---|
| A.D.A. பேரேரா | தொழிலின்மை |
| டேவிட் பெயின்டர் | இருண்ட திரைப் பாங்கு |
| A.C.G.S. அமரசேகர | பாட்லர் |
| தச்சனின் வீடு | பூர்வதேச சிறப்பு வாதம |
| இருண்ட திரை | இங்கிலாந்து றோயல் அக்கடமி |

10. இலங்கை கலைசங்க ஓவியர்களின் கலையாக்கத்தின் பொதுப் பண்புகளையும், வேறுபாடுகளையும் விமர்சன ரீதியாக முன்வைத்து ஆராய்க.

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.3

## செயற்பாடு இல :- 05

1. இரா ரவிவர்மாவின் ஓவியங்களுக்கேயுரிய மேலைத்தேய (ஆங்கில இந்திய) தன்மைப் பற்றி விளக்குக.
2. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களில் புராண இதிகாச சம்பவங்களின் இயல்புகளின் ஊடுறுவளை அலசுக
3. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களை பற்றி மதிப்பிடுக.
4. ஓவிய கலையில் செல்வாக்கு செலுத்திய இந்திய ஓவியர்களை குறிப்பிடுக.
5. மேலே நீர் கூறிய ஓவியர்களின் ஓவியங்களை பட்டியலிடுக.
6. ஐரோப்பிய கலை மரபில் இருந்து விலகி இந்திய மறுமலர்ச்சியின் செல்வாக்கினை நிலைநாட்டிய இந்திய சிறப்புக் கலைஞர்கள் யாவர்?
7. இந்திய ஓவிய கலை மறுமலர்ச்சி என்பதால் கருதப்படுவது யாது?
8. இந்திய ஓவிய கலை மறுமலர்சி கலைக்காலத்திற்கு பங்காற்றிய ஓவியர்களையும் அவர்களின் ஓவியங்களையும் அட்டவணைப்படுத்துக.
9. மேலே நீர் கூறிய ஓவியர்களின் ஓவியங்களில் வெளிப்படும் ஒத்துவமைப்பண்புகளை குறிப்பிட்டு விளக்குக.
10. இந்திய ஓவிய மறுமலர்ச்சியுக ஓவியர்களின் ஓவியங்களில் வர்ணப்பயன்பாடு மிகவும் சிறப்பு மிக்கது இக்கூற்றினை தகுந்த முன்வைப்புக்களைக் காட்டி விளக்குக.
11. இக்கால ஓவியர்கள் கையாண்ட கலை உத்திகளை முன்வைக்குக.
12. இந்திய கலை மறுமலர்ச்சிக்கு புத்துணர்வளித்த “அபிந்திரநாத் தாகூர், நந்நலால் போஸ்” ஆகியோரின் கலை ஆக்கங்களை கலை மதிப்பீடு செய்க.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.1

செயற்பாடு இல :- 06

01. இலங்கையில் காணப்படும் வரலாற்றுக் முற்பட்ட கால ஓவியங்கள் காணப்படும் இடங்களைப் பட்டியலிடுக.

02. இவ்வோவியங்கள் காணப்படும் இடங்களின் கட்டமைப்புக்களை விளக்குக.

03. இவ்வோவியங்கள் வரையக் கையாண்ட நுட்ப முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.?

04. தந்திரி மலை குகையில் காணப்படும் ஓவியங்களைப் பற்றி சிறு குறிப்பு ஒன்று வரைக.

05. வெட்ம்புக் கல குகையில் காணப்படும் ஓவியம் பற்றிய சிறப்பியல்புகள் யாவை?

06. கீழ் வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| | தந்திரி மலைக்குகை | பில்லாவ குகை | தொறவக்க குகை | வெட்டம்புக்கல |
|---|---|---|---|---|
| நுட்பமுறை | | | | |
| வர்ணப் பிரயோகம் | | | | |
| இடம் | | | | |
| ஓவியங்களின் பெயர்கள் | | | | |
| உயரம் | | | | |
| சிறப்பியல்புகள் | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.2

செயற்பாடு இல :- 07

01. ஐரோப்பாவில் வரலாற்றுக்கு முட்பட்ட கால குகை ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

02. மேற்குறிப்பிட்ட இடங்களின் காலப்பகுதியினை வரைசைப்படுத்துக.

03. இக்கால குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டமைக்கான காரணங்களை விளக்குக.

04. வர்ணங்கள் உருவாக்குவதற்கும், ஓவியங்களை வரைவதங்கும் பயன்படுத்திய நுட்ப முறைகளை முறையே தருக.

05. வரலாற்று சிறப்பு மிக்க லஸ்கோ குகை பற்றிய உமது மனப்பதிவினை முன்வைக்குக.

06. அட்டவணையினைப் பூரணப்படுத்திக் காட்டுக.

| குகைகள் | லஸ்கோ | ஆல்டமீரா | ஸ்வெட் | பேண்டிகோமி |
|---|---|---|---|---|
| காலம் | | | | |
| நுட்பமுறை | | | | |
| வர்ணப் பாவணை | | | | |
| காணப்படும் விலங்குருக்கள் | | | | |
| ஓவியங்கள் | | | | |
| சிறப்பியல்புகள் | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.3

செயற்பாடு இல :- 08

01. இலங்கையில் பிரசித்தி பெற்ற அட்டமஸ்தானங்களை குறிப்பிடுக.

02. தூபிகளின் ஆரம்பமும் அதன் வளர்ச்சியும் பற்றி கருத்துரைக்குக.

03. தூபியின் அங்களை வரைநதுக் குறித்துக் காட்டுக.

04. தூபிகளின் கட்டமைப்பினையும், அதன் பெயரினையும் வரைந்துக் குறித்துப் பெயரிடுக.

05. கீழ் காணும் செயற்பாட்டினைப் பூர்த்தி செய்க.

06.

| | தூபராமய | ருவன் வெலிசாய | அபயகிரி | ஜேத்தவன ராமய | ரன்கொத் விகாரை | கிரி விகாரை | ஹங்குராங்கெத்த ரஜமாவிகாரை |
|---|---|---|---|---|---|---|---|
| காலம் | | | | | | | |
| புனரமைத்த மன்னன் | | | | | | | |
| மீள் புரனமைப்பு செய்த மன்னன் | | | | | | | |
| உயரம் | | | | | | | |
| வடிவம் | | | | | | | |
| சிறப்பியல்புகள் | | | | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.4

செயற்பாடு இல :- 09

01. இலங்கையின் வரலாற்று ரீதியிலான பௌத்த கலை அம்சங்களுடன் தொடர்புடைய கட்டடக்கலை அம்சங்களைப் பெயரிடுக.

02. மேற்குறிப்பிட்ட கட்டடங்கள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களை முன்வைக்குக.

03. "ஆசனாகார" அமைக்கப்பட்டதன் காரணம் யாது?

04. ஜந்தாகர ஏன் உருவாக்கப்பட்டது. இந்த நிர்மாணிப்புக்கள் காணப்படும் இடங்கள் எவை?

05. போயாதின கருமங்கள் செய்யக் கூடும் மண்டபம் எவ்வாறு அழைக்கப்படும்.

06. இலங்கையில் பிரசித்தி பெற்ற போதிகரைகளைக் குறிப்பிடுக.

07. லோவமகாபாய கட்டிடத் தொகுயை நிர்மாணித்த மன்னன் காலம், அதன் சிறப்பு என்பவற்றை முறையேக் குறிப்பிடுக.

08. பியன்கல் என சிறப்புப் பெயர் பெறும் கட்டக்கலை யாது? அதனை வேறு எவ்வாறு அழைக்கலாம்.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.5

செயற்பாடு இல :- 10

01. தூபிகளுடன் தொடர்புப்பட்ட ஏனைய கட்டட நிர்மாணங்களைப் பெயரிடுக.

02. வாகல் கடத்திற்கு வழங்கப்படும் ஏனைய பெயர்களைக் குறிப்பிடுக.

03. வாகல் கடங்களில் நாற்திசையும் குறிக்கும் விதத்தில் பொழியப்பட்டுள்ள விலங்குருக்களை குறிப்பிடுக.

04. இலங்கையில் பிரசித்திப் பெற்ற கண்டக சைத்தியத்தைக் குறிப்பிட்டு அதன் கலை நிர்மாணிப்பனை சுருக்கமாக விளக்குக.

05. இலங்கில் பிரசித்திப் பெற்ற வாகல் கடங்கள் காணப்படும் இடங்களைப் பெயரிடுக.

06. சந்திரவட்க் கல்லுக்கு வழங்கப்படும் ஆரம்பகால பெயர்கள் யாவை?

07. இவற்றை கால அடிப்படையில் பாகுப்பாடு செய்து அதனை ஒப்பீட்டு ஆராய்க.

08. அநுராதபுர சந்திரவட்டக்கல் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

09. காவற்கல்லின் ஆரம்பம் முதல் தற்போது வரையான வளர்ச்சியினை படங்களின் உதவியுடன் வரையரை செய்க.

10. நிக்குடத்துடனான காவற்கல,நாக வடிவத்துடனான காவற்கல் காணப்படும் இடங்களை முறையேக் குறிப்பிடுக.

11. விஜயபாகு மன்னனுடைய அரண்மனை வாசலில் காவற்கல்லின் சிறப்பம்யாது?

12. கைப்பிடி வரிசைப் பற்றி கலை விமர்சனம் செய்க.

13. பொலநறுவை காலத்து கைப்பிடிகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

14. கண்டிக்காலத்து கைப்பிடி வரிசை எவ்வாறு மாற்றமடைந்து வந்த விதத்தினை விளக்குக.

15. சோபனா பந்திய பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக.

16. கலை வெளிப்பாடு நிறைந்த நிறைக்கலசம் காணப்படும் இடங்களைக் குறிப்பிட்டு அவை எந்த நுட்பமுறையில் அமையப் பெற்றுள்ளதென விளக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.12

## செயற்பாடு இல :- 11

01. சிந்து நதிக்கரை நாகரிகத்தை கால அடிப்படையில் வரையறை செய்க.

02. இந்நாகரிக் சார்ந்த கட்டடக் கலை அம்சங்களைக் குறிப்பிடுக.

03. இங்குக் காணப்படும் நதிக்கரை நாகரிக நகரங்களைப் பெயரிடுக.

04. இந்து நதிக்கரை மக்கள் பாதுகாப்பு மற்றும்,சுகாதாரம் கருதி அமைக்கப்பட்ட கட்டட நிர்மாணங்களைக் குறிப்பிடுக.

05. இந்து நதிக்கரையில் கிடைக்கப்பெற்ற சிலைகளைக் குறிப்பிடுக.

06. மொஹஞ்சதாரோ நகரம் அமையப் பெற்றுள்ள இடத்தை சரியாகக் குறிப்பிடுக.

07. முண்டப் படிமம் பற்றிய கலை மதிப்பீடு செய்க.

08. நடனமாது உருவத்தின சிறம்சம் பற்றிக் குறிப்பிடுக.

09. இங்கு கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அதன் சிறப்புக்கள் பற்றி கலந்துரையாடுக.

10. இக்காலத்தில் தாய் தெய்வ வழிபாடு இருந்தமைக்கான காரணங்களை முன்வைத்து விமர்சிக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.13

செயற்பாடு இல :- 12

01. அசோகத்தூண் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

02. மௌரிய பேரரசின் வரலாற்றுப்பின்னனியினைக் குறிப்பிடுக.

03. சாஞ்சி தூபியின் கட்டட நிர்மாணிப்பினையும் அதன் சிறப்பினையும் முன்வைக்குக.

04. அசோக தூண்களின் தனித்துவத்தினைக் குறிப்பிட்டு ஆராய்க.

05. அசோக தூண்களி உச்சிகளில் காணப்படும் வேலைப்பாடு தொடர்பான விளக்கம் ஒன்றினை முன்வைக்குக.

## செயற்பாடு இல :- 13

01. சாஞ்சி தோரணத்தின் கட்டமைப்பை வரைந்து விளக்குக.

02. இதன் செதுக்கல்கலை, பாரூட் கல்வேலி செதுக்களுடன் ஒப்பிடுக.

03. இச்செதுக்கள்களில் புத்தருக்குப் பதிலாகப் பயன் படுத்தப்பட்ட குறியீடுகளைக் குறிப்பிடுக.

04. பாரூட் கல்வேலியின் கட்டமைப்புப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.

05. சாஞ்சித்தோரண செதுக்கல்களின் கருப்பொருட்களின் அமைப்பையும், சிறப்புக்களையும் விளக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.19,7.20,7.21

செயற்பாடு இல :- 14

**01.** எகிப்திய கட்டிட நிர்மாணிப்பு பற்றி விளக்குக.

02. பிரமிடடுக்களின் கட்டமைபினை விளக்கப்படம் மூலம் வரைந்து விளக் அதன் கட்டமைப்பினை ஆராய்க.

03. பிரமிட்டுக்களின் கட்டமைப்பு உபயோகம்,உபயோகித்த மூலப்பொருள்,தொழிநுட்பத் திறன் என்பவற்றை குபு,கப்ரே பிரமிட்டுடன் ஒப்பிட்டு விளக்குக.

04. எகிப்திய பரமிட்டுக்கள் தோற்றம் பெறுவதற்குரிய வரலாறடறுப் பின்னனி காரணிகள் எவை?

05. எகிப்திய கட்டிட செல்வாக்கில் தோற்றம் பெற்ற தேவாலயங்களையும் அவற்றின் சிறப்புக்கள், கலைத்துவப் பண்புகள் என்பவற்றை விளக்கி கூறுக.

06. இக்காலத்தில் தோற்றம் பெற்ற சிற்பங்களை பெயரிடுக.

07. எகிப்திய கால சிற்பங்களின் பண்புகள், ஓவியம் வரைவதற்காகக் கையாண்ட நுட்பமுறைகள் என்பவற்றை விளக்குக.

08. நாமர் பலகை ஓவியத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்குக.

09. எகிப்திய கலை செல்வாக்கானது பெரும்பாலும் மன்னர்களின் பெருமைகளை மாத்திரமே எடுத்துக் காட்டுகின்றன. இந்த மேற்கோளுக்கு அமைய பொருத்தமான உதாரணங்களுடன் தெளிவுப்படுத்துக.

10. எகிப்திய சிற்பங்கள் இன்றும் உலகலாவிய அளவில் பேசுப் பொருளாக அமைகின்றன. இதற்கான காரணங்களைத் தெளிவுப்படுத்துக.

11. எகிப்த்திய கலை ஓவியக் கலை எழுச்சிப் பெற்றநாகரிகத்தில் தனித்துவமானது. எனும் அடிப்படையில் எகிப்தில் தோற்றம் பெற்ற ஓவியங்களைப் பட்டியலிடுக.

12. எகிப்திய கலை ஓவியங்களின் தொனிப்பொருளினை ஆராய்க.

13. எகிப்திய கால ஓவியங்களை கண்டறிக.

14. அவற்றின் தனித்துவப் பண்புகளை ஆராய்க.

15. எகிப்திய ஓவியங்கள் விரைப்புத் தன்மையும், உயிரோட்டம் குறைவானதுமாகக் காணப்படுகின்றது என்பதனை எகிப்திய ஓவியங்களை முன்னிறுத்தி விளக்குக.

# முதலாம் தவணை பகுதி II இற்கான பொருட்கூட்டச் செயற்பாடுகள்

01. சதுரமுகி சிறிய குடம் ஒன்றில் வைக்கப்பட்ட தேமா கிளை துணித்துண்டு தேங்காய் எனும் தொகுதிகளை ஒன்றிணைத்த இரேகைப் படம் ஒன்றினைக் கீறுக.

02. சதுரமுகி சிறிய குடம் பிளாஸ்டிக் ஜக் ஒன்றில் வைக்கப்பட்ட குறோட்டன் கிளை துணித்துண்டு அரைவாசி வெட்டப்பட்ட தேங்காய் எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

03. சதுரமுகி பிளாஸ்டிக் ஜக் ஒன்றில் வைக்கப்பட்ட கத்தி மட்பாண்டமொன்றில் வைக்கப்பட்ட அந்தூரியம் கிளை துணித்துண்டு வெட்டப்பட்ட தேங்காய் எனும் தொகுதிகளை ஒன்றிணைத்த வர்ணப்படமாக்குக.

04. சதுரமுகி, கண்ணாடி போத்தல், ஒன்றில் வைக்கப்பட்ட அந்தூரியம் கிளையுடன் ஒரு பூ, துணித்துண்டு வெட்டப்பட்ட இளநீர் எனும் தொகுதிகளை ஒன்றினைத்து வர்ணப்படமாக்குக.

05. புத்தக தொகுதி (05புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட Pots, பூவுடன் கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

06. புத்தக தொகுதி (05புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட Pots, பூவுடன் கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

# முதலாம் தவணைக்கான பகுதி III இற்குரிய செயற்பாடுகள்

1. பாடசாலை பரிசளிப்பு விழாவில் பங்குகொள்ளும் ஆசிரியர் மாணவ கூட்டம்
2. இல்ல விளையாட்டு போட்டியில் பங்குகொள்ளும் வீர வீராங்கனைகள்
3. ஆபத்தில் சிக்கிகொண்ட மக்களை மீட்டெடுக்கும் இளைஞ்ஞர் கூட்டம்
4. வனப்பகுதியில் அபிவிருத்தியில் ஈடுப்படும் நிறுவனத்தினர்கள்
5. கொரோனா நோய் தடுப்பில் ஈடுப்படும் இராணுவத்தினரும் பொலிஸ் அதிகாரிகளும்
6. மனித குடியிருப்புகளில் தன்ஆதிக்கத்தை செலுத்தும் காட்டுயானைகளின் செயற்பாடுகள்
7. காட்டுத்தீயில் அவதியுரும் விலங்குக் கூட்டம்
8. இயற்கை அனர்த்தத்தை எதிர்வுகூறும் விலங்குகளின் செயற்பாடுகள்
9. அருவியில் நீராட செல்லும் குதிரை கூட்டம் மற்றும் யானை கூட்டம்
10. அருவி வெட்ட செல்லும் உழவர்களும் உழத்திகளும்

# இரண்டாம் தவணை

# பகுதி I

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.2

செயற்பாடு இல :- 15

01. 20ம் நூற்றாண்டில் ஓவியத்துறைக்கு பங்காற்றிய சமய அடிப்படையிலான ஓவியர்களையும் அவர்களின் ஓவியங்களையும் பட்டியலிடுக.

02. சோலியஸ் மென்டிஸின் ஓவியங்களின் கலைப்பாணி, நுட்பமுறை, தொனிப்பொருள் சிறப்பு என்பவற்றின் அடிப்படையில் ஆராய்க.

03. களனி விகாரை ஓவியங்களின் தத்துரூப பாணியில் வெளிப்படும் மேலைத்தேய பண்புகளை முன்வைக்குக.

04. புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை ஓவியமாக்கிய ஓவியர்களின் கலை ஆக்கங்களை ஒப்பீட்டு மதிப்பிடுக.

05. புத்தரின் வரலாற்று சம்பவங்களையும், வாழ்க்கை சம்பவங்களையும் ஓவியமாக்கிய ஓவியர்களின் ஓவியத் திறமையினை ஒப்பிட்டு ஆராய்க.

06. பெல்லன் வில விகாரை ஓவியங்களின் சிறப்புக்கள் தொடர்பாக விமர்சனம் ஒன்றைத் தயார் செய்க.

07. பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்ட ஓவியங்களை இனங்காண்க.

- புத்தரின் புனித பாதத்தை சிவனொளி பாத மலையில் பதிக்கும் நிகழ்வு
- புத்தரின் உருவத்தைச் சூழ பிரகாசமான தீப்பிழம்பு காட்டப்படுவதுடன்,அதிக மனித உருக்களும் காணப்படல்.
- புத்தரின் பேரொளிக்கு கட்டுப்பட்ட யமத் தூதர்கள்.
- இளவரசர் சித்தாத்தர் யசோதரா தேவிக்கு மோதிரம் அணிவித்தல்.
- நான்கு வகை தெய்வங்கள் புடைசூழ மகா மாயாதேவி காட்சியளித்தளித்தல்.

08. பின்வரும் இலங்கை ஓவியர்களின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

சோமபந்து வித்தியாபதி M.சார்லிஸ், சோலியஸ் மென்டிஸ்

09. பின்வரும் ஓவியக் கலைஞர்களின் ஓவியங்களில் புலப்படும் மேலைத்தேய, கீழேத்தேய பண்புகளை வகைப்பிரிக்க.

10. பின்வரும் இரு வேறு ஓவியர்களால் வரையப்பட்ட திருமணக் காட்சி ஓவியத்தினை ஒப்பிடுக.

சோமபந்து வித்தியாபதி, M.சார்லிஸ்

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.2

செயற்பாடு இல :- 16

01. நாராயண சுவாமி அவர்களது ஓவியங்களில் செல்வாக்கு செலுத்திய இந்துப் புராண இதிகாச கதைகளை விளக்கி அதில் உள்ள கருப்பொருட்கள் புலனாகும் வண்ணம் வெளிப்படுத்திய விடயத்தினை விளக்குக.

02. நாராயண சுவாமியின் ஓவியப் பாணியினை கலைவிமர்சனம் செய்க.

செயற்பாடு இல :- 17

01. இரா ரவிவர்மாவின் ஓவியங்களுக்கேயுரிய மேலைத்தேய (ஆங்கில இந்திய) தன்மைப் பற்றி விளக்குக.

02. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களில் புராண இதிகாச சம்பவங்களின் இயல்புகளின் ஊடுறுவளை அலசுக

03. இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களை பற்றி மதிப்பிடுக.

04. ஓவிய கலையில் செல்வாக்கு செலுத்திய இந்திய ஓவியர்களை குறிப்பிடுக.

05. மேலே நீர் கூறிய ஓவியர்களின் ஓவியங்களை பட்டியலிடுக.

06. ஐரோப்பிய கலை மரபில் இருந்து விலகி இந்திய மறுமலர்ச்சியின் செல்வாக்கினை நிலைநாட்டிய இந்திய சிறப்புக் கலைஞர்கள் யாவர்?

07. இந்திய ஓவிய கலை மறுமலர்ச்சி என்பதால் கருதப்படுவது யாது?

08. இந்திய ஓவிய கலை மறுமலர்சி கலைக்காலத்திற்கு பங்காற்றிய ஓவியர்களையும் அவர்களின் ஓவியங்களையும் அட்டவணைப்படுத்துக.

09. மேலே நீர் கூறிய ஓவியர்களின் ஓவியங்களில் வெளிப்படும் ஒத்துவமைப்பண்புகளை குறிப்பிட்டு விளக்குக.

10. இந்திய ஓவிய மறுமலர்ச்சியுக ஓவியர்களின் ஓவியங்களில் வர்ணப்பயன்பாடு மிகவும் சிறப்பு மிக்கது இக்கூற்றினை தகுந்த முன்வைப்புக்களைக் காட்டி விளக்குக.

11. இக்கால ஓவியர்கள் கையாண்ட கலை உத்திகளை முன்வைக்குக.

12. இந்திய கலை மறுமலர்ச்சிக்கு புத்துணர்வளித்த “அபிந்திரநாத் தாகூர், நந்நலால் போஸ்” ஆகியோரின் கலை ஆக்கங்களை கலை மதிப்பீடு செய்க.

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.4

செயற்பாடு இல :- 18

01. ஓவியத் துறையின் எழுச்சிக்கு பங்காற்றிய மறுமலர்ச்சிக்கால ஓவியங்களின் பொதுப்பண்புகளைப் பட்டியல் படுத்துக.
02. மறுமலர்ச்சி கால ஓவியங்களில் சமூகப் பின்னனி முக்கியத்துவம் பெறும் விதத்தினை கலை வெளிப்பாட்டு ஆக்கங்களினூடாக பரிசீலனை செய்க.
03. லியானாடோ டாவின்சி நிர்மாணிப்பின் கலைநுட்பங்களை அவரது கலைபடைப்புகளினை மேற்கோள் காட்டி தெளிவுப்படுத்துக.
04. டாவின்சியின் ஓவியங்களை அட்டவணைப்படுத்துத்துக.
05. மறுமலர்ச்சிக்கு பங்காற்றிய ஓவியர்களின் பெயரையும் அவர்களது கலையாக்கங்களையும் விளக்குக.
06. டாவின்சி கலையாக்கத்தை முன்னிறுத்தி சிறுகுறிப்பு வரைக.
07. "மைக்கல் ஆஞ்சலோ ஓவியத்துறையில் சிற்பியும், ஓவியரும் ஆவார்." இக்கூற்றின் உண்மைத் தன்மையினை அவரது ஆக்கங்களை மேற்கோள் காட்டி வரிவாக்கம் செய்க.
08. ஆஞ்சலோவின் சிற்ப வெளிப்பாடுகள் கிரேக்கக் கலையின் தாக்கத்தை அதிகளவுக் கொண்டமைக்கான ஆதாரங்களை முன்வைக்குக.
09. மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புக்களின் வெளிப்பாட்டில் ஓவியங்களும், சிற்பங்களும் ஒரே மாதிரியான கருப் பொருளைக் கொண்டவை இக் கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? இதன் உண்மைத் தன்மையினை விளக்குக.
10. டாவின்சி,ஆஞ்சலோ இருவரினதும் ஆக்கம் தொடர்பிலான ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் உதாரணம் காட்டி கலந்தாலோசிக்க.
11. றபாயல் சென்சியோவின் வாழ்க்கை வரலாறு பற்றி சிறுகுறிப்பு ஒன்றினை முன்வைக்குக.
12. றபாயலின் முதல் இறுதி ஓவியத்தைப் பெயரிடுக.
13. றபாயலின் ஓவிய வரலாற்றில் "ஏதென்ஸ் பள்ளி" எனும் ஓவியம் ஏற்படுத்திய கலை செல்வாக்குப் பற்றி கருத்துரைக்குக.
14. " றபாயலும் மடோனாவும்" இக் கூற்றினை தகுந்த மேற்கோள்களுடன் விளக்குக.
15. " இறுதித் தீர்ப்பும் மைக்கல் ஆஞ்சலோவும்" இக்கூற்றினை ஆராய்க.
16. மனித உருக்களை தத்துரூபமாகவும், உயிரூட்டியும் காட்டியவர்கள் மறுமலர்ச்சி கால ஓவியர்களே இதன் பொருத்தப்பாட்டை மறுமலர்ச்சி கால ஓவியர்களின் படைப்புக்களைக் காட்டி விளக்குக.
17. மறுமலர்ச்சி கால ஓவியர்களின் ஓவியங்களில் கிறிஸ்தவ மத நாட்டமும், ஈடுபாடும் அதிகம் காணப்பட்டது என்பதனை தகுந்த ஆதாரங்களுடன் முன்வைத்து கலந்துரையாடுக.
18. மறுமலர்ச்சி கால ஓவியங்கள், சிற்பங்கள் என்பன தொடர்ந்து வந்த ஐரோப்பிய கால ஓவியர்களின் வாதங்களின் நிலைநாட்டலுக்கு உந்து சக்தியாக அமைந்தன. எனும் அடிப்படையில் கலை மதிப்பீடு ஒன்றினை முன்வைக்குக.
19. நிறப்பாவணை, ஓவிய பண்பியலின் ஆழம் என்பன மறுமலர்ச்சியின் ஆக்கங்களில் வெளிப்படுமாற்றினை ஆராய்க.
20. மறுமலர்ச்சி கால கலைஞர்களின் ஆக்கங்களை தேடி ஆய்ந்து தொகுப்பாக்கம் ஒன்று தயார் செய்க.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.6

செயற்பாடு இல :- 19

01. பொலநறுவைக் காலத்து பட்டிமாக்காரைகளைக் குறிப்பிடுக

02. இவை அமையப் பெற்ற பொது இயல்புகளை குறிப்பிடுக.

03. திவங்க சிலைமனையில் காணப்படும் ஆக்கங்களைக் குறிப்பிடுக.

04. திவங்க சிலைமனை எனப்பெயர் வரக் காரணம் யாது?

05. தூபாராம சிலைமனைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

06. இலங்கா திலக சிலைமனையின் சிறப்பம்சம் யாது?

07. இச்சிலைமனையின் மத்திய பகுதியில் எஞ்சியுள்ள கற்தூண்களின் எண்ணிக்கை யாது?

08. இச்சிலைமனையின் வெளிச்சுவரில் பூசப்பட்ட சாந்தின் பெயர் யாது?

09. முதலாம் சிவாலயம் கட்டப்பட்ட ஆண்டு கலைமரபு என்பவற்றைக் குறிப்பிடுக.

10. இச்சிவாலயத்தின் கட்டடக் கலை சிறப்பம்சத்தினைக் குறிப்பிடுக.

11. 2ம் சிவ ஆலயத்தை நிர்மாணித்த மன்னன், நூற்றாண்டு என்பவற்றைத் தருக.

12. முதலாம் சிவாலயத்திற்கும், 2ம் சிவாலயத்திற்கும் இடையிலான கட்டிடக்கலையின் வேறுப்பாடுகளைக் குறிப்பிடுக.

13. வைஜந்தி மண்டபத்தை நிர்மாணித்தவர் யார்.?

14. இந்நிர்மாணிப்பு பற்றிய தொல்பொருள் மூலாதாரங்களை முன்வைக்குக.

15. அதன் சிறப்புக்களைக் குறிப்பிடுக.

16. நிஸங்க மல்லனால் கட்டப்பட்ட நிஸங்கலதா மண்டபம் எக்கட்டிடத் தொகுதிக்குறியது.

17. இக்கட்டிடம் எதற்காக அமைக்கப்பட்டது?

18. அதனைக் குறிப்பிடும் கல்வெட்டின் பெயர் யாது?

19. இம்மண்டபத்தின் மத்தியில் காணப்படும் தாதுகோபம் பற்றிய சிறப்புக்களைக் குறிப்பிடுக.

20. தூபியின் அடிப்பகுதியில் காணப்படும் மனித உருவங்களான வலையம் எந்த முத்திரையல் காணப்படுகிறது.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.6

செயற்பாடு இல :- 20

01. தாது கோபத்தைச் சுற்றி அமைக்கப்படும் நிர்மாணணிப்பினை எப்பெயரால் அழைப்பர்.

02. பொலநறுவை வட்டதாகே மஹா பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டதென குறிப்பிடப்படும் ஆதாரம் யாது?

03. இவ் வட்டதாகேயன் சிறப்புக்களைக் குறிப்பிடுக.

04. திரியாயே வட்டதாகேயில் காணப்படும் மண்டபங்களையும் அதனுல் பொழியப்பட்ட கட்டட நிர்மாணிப்பு அம்சம் பற்றிக் குறிப்பிடுக.

05. இவ் வட்டதாகே மூன்றுக்கும் இடையிலான வேறுப்பாடுகளை உபயோகித்த ஊடகம், தொழிநுட்பம், நுட்பமுறை என்ற ஒழுங்கு முறையில் விளக்குக.

06. அநுராதபுர, பொலநறுவை கால குள நிர்மாணிப்புகளைக் குறிப்பிடுக.

07. அபயகிரி விகாரைப் பகுதியில் அமைந்துள்ள குளம் எது?

08. ரன்மசு உயன்ன பூங்கா குளம் அமைந்த நிலப்பரப்பு எவ்வளவு?

09. பொலநறுவை குமார பொக்குண வமடசக்கதைகள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

10. தாமரைமலர் குளம் எம்மன்னனால் எவ்விகாரையில், எதற்காக அமைக்கப்பட்டதென குறிப்பிடப்படுகின்றது?

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.7

செயற்பாடு இல :- 21

01. இசுறுமுனிய விகாரை அமையப் பெற்ற இடத்தினைக் குறிப்பிடுக.

02. இசுறுமுனிய விகாரையில் காணப்படும் செதுக்கல்களைக் குறிப்பிடுக.

03. காதலர் சிலை எக்காலத்திற்குறியது அது ஆக்கப்பட்ட கலைமரபு ன்பன தருக.

04. இகடகாதலர் சிலையில் பெண்ணின் தலை,கண், வலக்கை, வெளிப்படுத்தும் முத்திரையினைத் தருக.

05. ஆணின் தலை, இரு கைகள், குறிக்கப்படும் முத்திரையினை விளக்குக.

06. இச்சிலை கண்டெக்கப்பட்ட இடம் யாது?

07. மனிதனும் குதிரைத் தலையும் என்ற சிற்பத்தில் ஆணின் உருவம் காட்டும் ஆசனம் யாது?

08. இப்படைப்பில் மனித உருவிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

09. அரச குடும்பம் எக்கலை மரபில், எந்த புடைப்பு முறையில் அமையப் பெற்றுள்ளது.

10. இந்த நிர்மாணிப்பு பற்றி பேராசிரியர் செனரத் பரணவித்தாரண அவர்களின் கருத்து யாது?

11. இச்செதுக்கலில் குறிப்பிடப்படும் அரசவாழ்க்கைக்குரிய மன்னன் யார்?

12. நீராடும் யானைகள் என்ற சிற்பம் இந்தியாவின் எந்த மரபைத் தழுவியது.அதனூடு வெளிப்படுத்தப்படும் ஏனைய மாதிரி செதுக்கல் யாது?

13. இந்நிர்மாணிப்பின் கலை நுட்பத்தினை விளக்குக.

14. அநுராத புரக்கால செதுக்கள்களில் இசுறுமுனிய சிற்பங்கள் பெறும் செல்வாக்கினை கலந்துரையாடுக.

15. காதலர் சிலையின் கலை செல்வாக்கு இன்றும் ஈடு செய்ய முடியாத சிற்பத்திறனாகும். என்பதனை சிற்பத்தின் கலையம்சத்தினை மேற்கோள் காட்டி விளக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.8

செயற்பாடு இல :- 22

01. அநுராத புரக்கால புத்தர் சிலைகள் காட்டும் சிறப்புப் பண்புகளை எடுத்துக் காட்டுக.

02. "அநுராத புரக் கால புத்தர் சிலைகள் பின்வந்த காலங்களில் சிறப்பு சிலைகளாக தோற்றம்பெறக் காரணங்களாக அமைந்தன". இதன் அடிப்படை உண்மைகனை ஆராய்க.

03. "அநுராத புரக்கால புத்தர் சிலைகள் பௌத்த சமய எழுச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்தன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

04. அவுக்கண புத்தர் சிலைப்பற்றி தொல்பொருள் ஆய்வாளர்களின் கருத்துக்களை முன்வைக்குக.

05. கீழ்வரும் அட்டவணையினை பூர்த்தி செய்து உமது ஆசிரியருடன் கலந்தாலோசிக்குக.

| சிலைகள் | மஹாஇழுப்பல்லம | சமாதி புத்தர் | தொழுவில | பங்குளிய புத்தர் | அவுக்கண புத்தர் |
|---|---|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற இடம் | | | | | |
| மரபு | | | | | |
| காலம் | | | | | |
| உயரம் | | | | | |
| ஊடகம் | | | | | |
| முத்திரை | | | | | |
| ஆசனம் | | | | | |
| கலையம்சம் | | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.11

செயற்பாடு இல :- 23

01. அநுராதபுரக்கால ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

02. சீகிரியாக் குன்று அமையப் பெற்றுள்ள இடத்தினைக் குறிப்பிடுக.

03. சீகிரியா ஓவியங்கள் இந்தியாவின் எந்த ஓவிய சாயலைப் பின்பற்றி காணப்படுகின்றன.

04. இவ்வோவியம் உருவாக்க பயன்படுத்தப்பட்ட வர்ணங்களைக் குறிப்பிடுக.

05. இங்கு ஓவியமாக்கப்பட்ட பெண்கள் வேறு எப்பெயர்களால் அழைப்பர்.

06. ஹிந்த கலையில் காணப்படும் ஓவியம் எக்காலத்துக்குறியது.

07. இக்குகையில் காணப்படும் ஓவியங்கையும் அதன் சிறப்புக்களையும் விளக்குக.

08. கொனாகொல்ல ஓவிய குகை அமையப்பெற்றுள்ள பிரதேசம் யாது?

09. மஹியங்கனை தாது கர்ப்பத்தில் காணப்படும் ஓவியங்களைக் குறிப்பிடுக.

10. இவ்வோவியம் வரையப் பயன்படுத்தப்பட்ட வர்ணங்களைக் குறிப்பிடுக.

11. பொலநறுவைக்காலத்து ஓவியங்கள் காணப்படும் இடங்கள்யாவை?

12. திவங்க சிலைமனையின் ஜாதகக் கதையினை இனங்கண்டு அதன் சிறப்புக்களை வரையறை செய்க.

13. கல்விகாரை வித்தியாதாரக் குகையில் காணப்படும் ஓவியங்களைக் குறிப்பிடுக.

14. திம்புலாக் கல மார வீதிய என்ற இடத்தில் காணணப்படும் இரு குகைளளைக் குறிப்பிட்டு அவற்றின் ஜாதகக் கதைகளைக் குறிப்பிடுக.

15. திவங்கசிலைமனையின் உருவாக்கம் தொடர்பாக குறிப்பிடுக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.15

செயற்பாடு இல :- 24

**இந்தியக் கலை வரலாற்றின் புத்தர் சிலைகளை இங்குக் காட்டப்படும் அட்டவணைக்கு ஏற்ப பகுப்பாய்வு செய்க.**

| | காலம் | ஊடகம் | நுட்ப முறை | முகத் தோற்றம் | ஆடையமைப்பு | உணர்வு வெளிப்பாடு | சிறப்பியல்பு |
|---|---|---|---|---|---|---|---|
| ஹோட் மாந்தர் புத்தர் சிலை | | | | | | | |
| பிரேகம் புத்தர் | | | | | | | |
| தக்கிபஹீர் புத்தர் | | | | | | | |
| சகரி பக்லேன் புத்தர் | | | | | | | |
| துஸ்தர கிரியாவ | | | | | | | |
| கத்ரா சிலை | | | | | | | |
| கனிஸ்க அரசனின் சிலை | | | | | | | |

**தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.16**

**செயற்பாடு இல :- 25**

01. அமராவதி கலை செல்வாக்குப் பற்றிய சிறு குறிப்பு ஒன்றுத்தருக.

02. அமராவதி கலைமரபின் ஊடே நிர்மாணிக்கப்பட்ட கலை நிர்மாணிப்புக்களை குறிப்பிடுக.

03. இச் செகுக்கல்களின் பொதுப்பண்புகளை விளக்குக.

04. மாயாதேவி கனவு என்ற ஆக்கத்தின மூலம் வெளிப்படுத்தப்படும் வரலாற்று நிகழ்வு யாது?

05. புத்தரின் வாழ்க்கைச் சம்பவம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கங்களை விளக்குக.

06. அமராவதி செதுக்கல் பாரூட் செதுக்கல்களிலிருந்து எவ்வாறு வேறுப்படுகின்றது.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.17

செயற்பாடு இல :- 26

01. குப்த கலைமரபின் சிறப்பு ஏனைய கலைக்கால மரபிலிருந்து எவ்வாறு சிறப்பு செல்வாக்குப் பெறுகின்றது.

02. குப்த கலை நிர்மாணிப்பின் விசேட பண்புகளை முன்வைக்குக.

03. குப்த கலை மரபின் சிறப்புப் பெற்ற 02 புத்தர் சிலைகளைக் குறிப்பிடுக்.

04. ஜமல்பூர் நின்ற நிலை சிலைப் பற்றிய சிறப்பம்சங்களை விளக்குக.

05. சாரணாத் சிலை புத்தர்சிலை அதிக ஆன்மீக தன்மையும், ஏனைய சிலைகளிலிருந்து தனித்துவம் பெற்றதும் ஆகும். இதன் பொருத்தப்பாட்டை ஆராய்க.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.22

செயற்பாடு இல :- 27

01. கிரேக்கக் காலத்தில் தோற்றம் பெற்ற கட்டிடக்கலைகளை கூறுக.

02. அவற்றின் அழகு,சிற்ப எழுச்சிக்குக் கிரேக்கக் காலத் தூண்களேக் காரணமாயின தூண்களை பெயரிட்டு அவற்றின் சிறப்புக்களை விளக்குக.

03. கிரேக்க கால ஆலயங்கள் 05இன் பெயர்களைத் தருக.

04. இக்காலத்தில் தோற்றம் பெற்ற மட்பாண்டங்களின் கைத்திறன்களை ஆராய்க.

05. கிரேக்க சிற்பங்களைப் பெயரிட்டு கால அடிப்படையில் பாகுப்படுத்தி ஆராய்க.

# இரண்டாம் தவணை பகுதி II இற்கான பொருட்கூட்டச் செயற்பாடுகள்

1. சதுரமுகி, கண்ணாடி போத்தல், ஒன்றில் வைக்கப்பட்ட அந்தூரியம் கிளையுடன் ஒரு பூ, துணித்துண்டு வெட்டப்பட்ட இளநீர் எனும் தொகுதிகளை ஒன்றினைத்து வர்ணப்படமாக்குக.

2. புத்தக தொகுதி (05புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட Pots, பூவுடன் கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

3. ஆப்பில் பழம், கனவடிவ பெட்டி, கண்ணாடிக் கோப்பை,கட்டம் இடப்பட்ட சீத்தை கொண்ட பொருட்தொகுதியினைப் படமாக்குக.

4. நீர்கூசா, சிறிய குப்பைக் கூடை, காகித சுரள்,கண்ணாடிகுவளை அதனுள் மஞ்சள் நிறமூட்டப்பட்ட அரைவாசி அளவு நீர், பெரிய பந்துக் கொண்ட பொருட்களை ஒருங்கிணைத்து படமாக்குக.

5. பிளாஸ்டிக் பாத்திரத்தின் உள்ளே,இடப்பட்ட மேசைக்கத்தி வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

6. புத்தக தொகுதி (06புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட , கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட அன்னாசி ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

## இரண்டாம் தவணைக்கான பகுதி III இற்குரிய செயற்பாடுகள்

1. பாரம்பரிய காட்டுருக்களை கொண்டு சமாந்தர ரீதியாக ஆக்கப்பூர்வமான காப்பட் அலங்காரம் ஒன்றைத் தயாரிக்க.
2. கொடி அலங்காரத்தினை கொண்டு சேலைக்கரைக்கான அலங்காரம்.
3. பிராணிகளின் உருவங்களை கொண்டு பொதிசுற்றும் தாளுக்கான முழுத்தள அலங்காரம்
4. கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக சுவரொட்டி ஒன்று தயார் செய்க.
5. "அருகி வரும் வன வள விலங்குங்குகளைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பிலான சுவடொட்டி ஒன்று தயாரிக்குக.
6. "ஈரநிலபாதுகாப்பு" தொடர்பிலான விழிப்புணர்வு சுவரொட்டி
7. "உலக தொழிலாளர் தினத்திற்கான" நினைவுச்சின்னம் ஒன்று தயாரிக்குக
8. உமது விளையாட்டு கழகத்திற்கு "நவீன நுட்பமுறையிலான இலட்சினை" ஒன்று தயாரிக்குக.
9. சிறுவர் கதை புத்தகத்திற்கான உள்பக்க விளக்கப்படம் ஒன்று தயாரிக்குக
10. பாடசாலை கலை விழாவிற்கான வாழ்த்து அட்டை ஒன்று தயாரிக்குக.

# மூன்றாம் தவணை

# பகுதி I

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.5

செயற்பாடு இல :- 28

01. மனப்பதிவு வாதத்தின் விசேட பண்புகளை விளக்குக.

02. கிளட்மொனேயின் ஆக்கங்களை தேடி ஆய்க.

03. எட்கா டெகாசின்ஓவியங்களை மனப்பதிவு வாத ஓவியத்துடன் ஒப்பீடு செய்க.

04. மேறி கசட்டின் ஓவியங்களை குறிப்பிட்டு ஆராய்க.

05. மேறி கசட்டின் ஓவியங்கள் மனப்பதிவு வாதக் கலைக்கு ஆற்றிய பங்களிப்புகள் பிற் கால ஓவியர்களின் ஓவிய வளர்ச்சிக்கு எவ்வாறு வித்திட்டது ஆராய்க.

தேர்ச்சி :- 6.0 தேர்ச்சி மட்டம் :- 6.5

செயற்பாடு இல :- 29

01. பின் மனப்பதிவு வாதம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

02. வின்சன் வான்கோவின் ஆக்கங்கள் பின்மனப்பதிவு வாத நுட்பமுறையுடன் எவ்வாறு பொருந்துகின்றது. இக்கூற்றினை ஆராய்க.

03. வான்கோவின் வறுமை வெளிப்பாடு காட்டும் “உருளைக் கிழங்கு உண்போர்”ஆக்கத்தின் இயல்பு வெளிப்பாட்டினை முன்வைக்குக.

04. போல் கெகானின் நிர்மாணிப்புக்களை பட்டியலிடுக.

05. போல் கெகானின் படைப்பான மஞ்சள் நிற கிறிஸ்து என்ற ஓவியத்தில் ணகுறியீட்டு பாங்கு வெளிப்படுமாற்றை விளக்குக.

06. போல் கெகானின் ஆக்கங்களில் அரூப வாத தன்மை வெளிப்டுத்தப்படும் விதம் யாது?

07. போல் கெகானின் ஆக்கங்களில் இரண்டினைத் தெரிவு செய்து கலை மதிப்பீடு செய்க.

08. ஐரோப்பிய மனப்பதிவு வாதிகளின் ஓவியங்களையும், பின் மனப்பதிவு வாதிகளின் ஓவியங்களையும் ஒப்பீட்டு விளக்குக.

09. போல் செசான் பின் மனபபதிவு வாத கலையில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பட்டியலிடுக.

10. போல் செசானின் படைப்புக்கள் வின்சன் வான்கோவின் படைப்புக்களில் ஏற்படுத்திய தாக்கங்களை விளக்குக.

## செயற்பாடு இல :- 30

01. கியூபிசம் என்பதால் கருதப்புடுவது யாது?

02. கனவடிவ வாத கலைஞர்களின் பெயர்களைத் தருக.

03. பிக்காசோவின் நிர்மாணிப்புக்களை குறிப்பிட்டு, அவற்றை அவற்றின் கால வரையறைக்கு ஏற்ப பகுப்பாய்வு செய்க.

04. பிக்காசோவின் கலை வாழ்க்கைப் பருவங்களைக் குறிப்பிட்டு அக்காலத்தில் உருவாக்கிய ஓவியங்களை விளக்குக.

05. பிக்காசோ "அவிக்கோவின் யுவதிகள்" "குவர்ணிக்கா" ஆகிய ஓவியங்கள் மூலம் ஓவியத்துறையில் புதுப் பரிணாமம் பெற்றார். இக்கருத்தின் உண்மைத் தன்மையினை ஆராய்க.

06. ஓலமீடும் பெண்ணின் கருப்பொருள் யாது?

07. ஜோர்ஜ் பிராக்கின் கனவடிவ வாத பண்புகளினூடு அவரின் ஆக்கங்களை கலைமதிப்பீடு செய்க.

08. ஜோர்ஜ் பிராக்கின் ஆக்கங்களுக்கும், பிக்காசோவின் ஆக்கங்களுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

09. கீழ்வரும் அட்டவணையினை பூரணப் படுத்துக.

| | கலைஞர்கள் | காலப்பகுதி | ஆக்கங்கள் | ஓவியங்களுக்கா கையாண்ட வாதம் | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|---|---|
| 01 | க்ளோட் மொனே | | | | |
| 02 | வின்சன் வான்கோ | | | | |
| 03 | பிக்காசோ | | | | |
| 04 | மேறி கசட் | | | | |
| 05 | போல் கெகான் | | | | |
| 06 | ஜோர்ஜ் பிராக் | | | | |
| 07 | போல் செசான் | | | | |
| 08 | எட்கா டெகாஸ் | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.9

செயற்பாடு இல :- 31

01. பொலனறுவைக் காலத்து புத்தர் சிலை நிர்மாணிப்புக்களைப் பெயரிடுக.
02. பொலநறுவைக் கல் விகாரையில் தோரணத்துடன் காணப்படும் புத்தர்சிலையின் ஆசனம்,உ யரம்,முத்திரை என்பனவற்றைக் குறிப்பிடுக.
03. இச்சிலைக்குப்பின்னால் உள்ள தோரணம் பற்றிய கலைச்சிறப்பு எவ்வாறானது என்பதை விளக்குக.
04. இச்சிலையானது மஹாயான பௌத்த எண்ணக்கருவில் நிர்மாணிக்கப்பட்டதென சந்திர விக்ரம கமகே கருத்துரைப்பதற்கான காரணங்களை விளக்குக.
05. வித்தியாதார குகையில் காணப்படும் சிலைகளைக் குறிப்பிடுக.
06. வித்தியாதார குகையின் வித்தியாதார அமர்ந்த நிலை சிலைப்பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.
07. கல்விகாரை நின்ற நிலை சிலைப் பற்றிய சிறுகுறிப்பு வரைக.
08. இச்சிலைப் பற்றிய செணரத் பரணவித்தாரண அவர்களின் கருத்து யாது?
09. கல்விகாரை சமாதி புத்தர் சிலையின் நீளம் யாது?
10. வட்டதாகேயில் காணப்படும் புத்தர் சிலையின் பொதுப் பண்புகளைக் குறிப்பிடுக.
11. பொத்குல் விகாரை சிபைப் பற்றி கலை மதிப்பீடு செய்க.
12. இச்சிலையின் வேறுப் பெயரைக் குறிப்பிடுக.
13. கண்டி,கம்பளை காலத்துக்குறிய புத்தர் சிலைகள் காணக்கூடிய இடங்களைக் குறிப்பிடுக.
14. இச்சிலைகள் அமையப் பெற்ற காலப்பகுதியினையும் கலை மரபினையும் குறிப்பிடுக.
15. அநுராதபுர, பொலநறுவைக் கால புத்தர் சிலைகளிலிருந்து கண்டி கம்பளை கால சிலைகள் எவ்வாறு வேறுப்படுகின்றன.
16. கடலாதெனிய அமர்ந்த நிலை புத்தர் சிலைப் பற்றிய சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுக.
17. தம்புள்ள இரஜ மகா விகாரை புத்தர் சிலைகள் பொலநறுவைக் கால புத்தர் சிலைகளிலிருந்து வேறுப்படுமாற்றை விளக்குக.
18. இலங்கையின் புத்தர் சிலை நிர்மாணப்பணியின் வளர்ச்சியினை படிமுறை ரீதியாக விளக்குக.
19. கண்டி,கம்பளை காலப் புத்தர் சிலைகளின் ஊடகப்பயன்பாட்டை விளக்குக.

கண்டி, கம்பளை கால புத்தர் சிலைகளுக்கு அப்பாற்பட்டு காணப்படும் ஏனைய சிறப்பு வாய்ந்த இரு கலையம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.9

செயற்பாடு இல :- 32

"புத்தர் சிலைகளின் செல்வாக்கு என்பது இலங்கையின் கலை வரலாற்றில் பெரும் முன்னேற்றம் கொண்டதாகக் காணப்படுகின்றமை சிறப்பானதே!

| | | இடம் | ஊடகம் | ஆசனம் | முத்திரை | மெய் நிலைகள் | செல்வாக்கு செலுத்தும் மத எண்ணக்கரு | கலைப் பண்பு நுட்ப முறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கல்விகாரைதோரணத்துடன் கூடிய புத்தர் சிலை | | | | | | | |
| 02 | கல்விகாரை அமர்ந்த நிலை சிலை | | | | | | | |
| 03 | கல்விகாரை நின்ற சிலை | | | | | | | |
| 04 | கல்விகாரை சயன நிலை புத்தர் சிலை | | | | | | | |
| 05 | வட்டதாகே புத்தர் சிலை | | | | | | | |
| 06 | பொத்குல் விகாரை சிலை | | | | | | | |
| 07 | கடலாதெனிய அமர்ந்த சிலை | | | | | | | |
| 08 | லங்காதிலக அமர்ந்த நிலை சிலை | | | | | | | |
| 09 | தம்புள்ள இரஜமாகா விகாரை புத்தர் சிலை | | | | | | | |

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.10

செயற்பாடு இல :- 33

01. இலங்கையில் உள்ள சிறப்பு வாய்ந்த உலோக வார்ப்பு சிலைகளைக் குறிப்பிடுக.

02. அர்த்தநாரீஸ்வர சிலையின் வார்ப்பு நுட்ப முறை யாது?

03. அவலோகீஸ்வரர் போதிசத்துவர் சிலை எவ்விகாரையிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

04. இச்சிலையின் முத்திரை யாது?

05. மாலாதாரா சிலையின் சிறப்பம்சங்களை புனைக்க.

06. எப்பஹுன விளக்கு எத்தனையாம் ஆண்டு, எங்கு கண்டெடுக்கப்பட்டது. இதன் உயரம் யாது?

07. நடராஜர் சிலையின் சமய இலட்சனக் குறியீடு யாது?

08. இச்சிலையின் நான்கு கைகளும் குறிப்பிடும் விடயங்களை அடையாளப் படுத்துக.

09. சோமஸ்கந்தர் சிலைப் பற்றிய கலைச் சிறப்பு யாது? இச்சிலை எங்கு கண்டெடுக்கப்பட்டது.

10. இச்சிலையின் இரு பாதங்கள் எம்முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.11

செயற்பாடு இல :- 34

## கண்டி, மலைநாட்டு ஓவியங்கள்.

01.

| | ஓவியப் பண்புகள் | கருப் பொருள் | வரைந்த ஓவியயர்கள் | உபயோகிக்கப் பட்ட வர்ணங்கள் | நுட்பம் | காலப்பகுதி | காணப்படும் இடங்கள் | ஜாதாக கதைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தெகல் தொறுவ | | | | | | | | |
| மெதவல டம்பிட்ட விகாரை | | | | | | | | |
| தம்புள்ள ரஜமகா விகாரை | | | | | | | | |
| கதலுவ பூர்வாராயம | | | | | | | | |
| முல்கிரிகல விகாரை | | | | | | | | |
| கரகம பிட்டிய சுபோதாராமய | | | | | | | | |
| தெல்வத்த விகாரை | | | | | | | | |

02. கண்டி மலைநாட்டு ஓவியங்களின் பண்புகளைக் குறிப்பிடுக.

03. தாழ்நாட்டு ஓவியங்கள் மலைநாட்டு ஓவியங்களிலிருந்து எவ்வாறு வேறுப்படுகின்றது.

04. தாழ்நாட்டு ஓவிய செல்வாக்கில் மேலைத்தேய தாக்கங்கள் காணப்பட்டமைக்கான சாட்சிகளை முன்வைக்குக.

05. தாழ்நாட்டு ஓவியப் பண்பும், கண்டிகால ஓவிய பண்பும் இணையும், வேறுப்படுமாற்றையும் விளக்குக.

தேர்ச்சி :- 7.0 தேர்ச்சி மட்டம் :- 7.18

செயற்பாடு இல :- 35

01. அஜந்தா குகையின் அமைவிடத்தினை பொருத்தமாக விளக்குக.

02. அஜந்தா கதை ஓவியங்களின் விசேட பண்புகளைக் குறிப்பிடுக

03. இங்குகாணப்படும் ஓவியங்களைக் குகை ஒழுங்கில் குறிப்பிடுக.


04. இங்குக் காணப்படும் சிறப்பு ஓவியமான பத்மபாணி போதிசத்துவர் பற்றிய ஓவிய சிறப்புக்களை விளக்குக.

05. அஜந்தா குகையில் சைத்திய மண்டபம், விகாரை மண்டபம் ஆகியவற்றுக்கு ஏனைய இலக்க குகைகள் சார்ந்த ஓவியங்களைக் குறிப்பிடுக.

## செயற்பாட்டு இல :- 36

<u>பின்வரும் படக்காட்சிகளை கலைதொனி வெளிப்படும் வகையில் கலை விமர்சனம் செய்க. காலம்,கருப்பொருள்,கலைஞர், கருப்பொருள் நுட்பம், எனும் அடிப்படையில் விமர்சிக்குக.</u>


01




02



03



04




05




செயற்பாடு இல :- 37


**கீழ் காட்டப்படும் புத்தர் சிலைகளை காலம், சிற்ப முறை, கலைவெளிப்பாடு, முத்திரை,ஆசனம்,ஊடகம், உணர்வு வெளிப்பாடு எனும் அடிப்படையில் ஒப்பிட்டு ஆராய்க.**














செயற்பாடு இல :- 38

**கீழ்காணும் ஓவியங்கள் காணப்படும் இடங்கள், கருப்பொருள்,நுட்பம்,காலசெல்வாக்கு, எண்ணக்கரு,நுட்பம்,கலைப்பண்பு என்பன பற்றி கருத்தாடல் செய்க.**






















## செயற்பாடு இல :- 39

**இங்குத் தரப்பட்டுள்ள செயற்பாட்டினூடாக விகாரைகள் தோற்றம் பெற்ற காலம்,மன்னன்,வடிவம்,ஊடகம்,நுட்பம், கலைப்பண்பு,வெளிநாட்டுத் தாக்கம் எனும் அடிப் அடிப்படையில் ஆராய்க.**












## செயற்பாடு இல :- 40

**இங்குத் தரப்பட்டுள்ள செயற்பாட்டினூடாக சிற்பங்களுக்கான தோற்றம் பெற்ற காலம்,மன்னன், ஊடகம், கலைப்பண்பு, எனும் அடிப்படையில் ஆராய்க.**
















## செயற்பாடு இல :- 41


**இந்திய சிற்பக் கலைகளின் செல்வாக்குப் பற்றிய கலை மதிப்பீடு ஒன்றினைத் தருக.**














# மூன்றாம் தவணை
# பகுதி II இற்கான பொருட்கூட்டச் செயற்பாடுகள்

1. சதுரமுகி, கண்ணாடி போத்தல், ஒன்றில் வைக்கப்பட்ட அந்தூரியம் கிளையுடன் ஒரு பூ, துணித்துண்டு வெட்டப்பட்ட இளநீர் எனும் தொகுதிகளை ஒன்றினைத்து வர்ணப்படமாக்குக.

2. புத்தக தொகுதி (05புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட Pots, பூவுடன் கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

3. ஆப்பில் பழம், கனவடிவ பெட்டி, கண்ணாடிக் கோப்பை,கட்டம் இடப்பட்ட சீத்தை கொண்ட பொருட்தொகுதியினைப் படமாக்குக.

4. நீர்கூசா, சிறிய குப்பைக் கூடை, காகித சுரள்,கண்ணாடிகுவளை அதனுள் மஞ்சள் நிறமூட்டப்பட்ட அரைவாசி அளவு நீர், பெரிய பந்துக் கொண்ட பொருட்களை ஒருங்கிணைத்து படமாக்குக.

5. பிளாஸ்டிக் பாத்திரத்தின் உள்ளே,இடப்பட்ட மேசைக்கத்தி வெட்டப்பட்ட தர்பூசணி காய் வெட்டப்பட்ட ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

6. புத்தக தொகுதி (06புத்தகம்), ஜம் போத்தல், பூவுடன் செவ்வரத்தைக் கிளைஒன்று வைக்கப்பட்ட , கூடிய துணித்துண்டு வெட்டப்பட்ட அன்னாசி ஒரு துண்டு, எனும் தொகுதிகளை ஒன்றிணைத்து வர்ணப்படமாக்குக.

# மூன்றாம் தவணைக்கான பகுதி III இற்குரிய செயற்பாடுகள்

1. நவீன உபகரணங்களுடன் தொழிற்புரியும் உழவர்கள்
2. வயல்வெளி அருகாமையில் இருக்கும் ஆலத்தின் கீழ் இளைப்பாறும் விவசாயிகள்
3. சூடு மிதிக்கும் எருமைகள் கூட்டம்
4. சித்திரை வருடப்பிறப்பன்று கோயில் வழிப்பாட்டில் ஈடுப்படும் குடும்பத்தினர்
5. வருடப்பிறப்பன்று மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டியிருக்கும் சிறார்க்கூட்டம்
6. கடற்கரையோரத்தில் இரவுவேளையில் வருடப்பிறப்பினை கொண்டாடும் இளைஞர் கூட்டம்
7. சித்திரை மாதத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் வகையில் பத்திரிகை ஒன்றிற்கான விளக்கப்பட சித்திரம்
8. பாரம்பரிய அலங்காரங்களை கொண்டு காற்றோட்ட துவாரங்களுக்கான செதுக்கல்
9. பூ வேலைப்பாடுகளுடனான காற்றோட்ட துவாரத்திக்கான செதுக்கல
10. அறுகோண வடிவமுடைய பாரம்பரிய மலர் அலங்காரங்களை கொண்டு வட்டத்தட்டுக்கான அலங்காரம்.

# செய்முறை பயிற்சிக்கான செயற்பாட்டு உதவி படங்கள்







